Scanned by CamScanner

கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

'வி'யில் தொடங்கும் பொருட்கள் இங்கே எத்தனை சிதறியுள்ளன? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



Scanned by CamScanner

ராணி காமிக்ஸ்–129
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 1–15
1989

சிஸ்கோ தோன்றும்

அழகி வேட்டை!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner





Scanned by CamScanner

அப்போது, அவ்வழியே விக்டர் குதிரையில் வந்து கொண்டிருந்தான்.
இந்தப் படுபாவிதான் என் வாழ்க்கையை நாசமாக்கினான்!
விக்டர் பட்டறையைத் தாண்டும் போது உள்ளே நோட்டமிட்டான்!
பைத்தியக்காரன் போல உடை யணிந்திருக் கிறானே!
அவன் எப்பொழுதும் அந்த உடையில்தான் இருப்பான்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner





Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

ரீட்டா மாடியில்தானே இருப்பாள்?
ஆமாம்! அவளுக்குப் பலத்த பாதுகாப்பு போடப் பட்டிருக்கும்!


ரீட்டாவின் அறை.
நான் சிறிதுநேரம் காற்று வாங்க மாடியில் நின்றுவிட்டு வருகிறேன்!
வேண்டாம் ரீட்டா! உன்னை வெளியே விடக்கூடாது என்பது விக்டரின் கட்டளை!
பாதுகாப்புப் பெண் ரீட்டாவை தடுத்தாள்.


ஆயுதங்கள் இல்லாமல், விக்டரின் கூட்டத்தை சமாளிக்க முடியுமா?
ஏன், நமக்கு கைகள் இல்லையா?
டிஸ்கோவும், மில்டனும் சாப்பிட்டுக் கொண்டே சுற்றிலும் நோட்டமிட்டார்கள்.

அதற்குள் அலெக்சு கையில் ஒரு தட்டுடன் விடுதியின் கூரையில் பதுங்கிப் பதுங்கி வந்தான்!
நல்லவேளை! என்னை யாரும் பார்க்கவில்லை!
அலெக்சு, விடுதியில் உள்ள சமையல் அறையின் புகைபோக்கிக் குழாயை தட்டினால் மூடினான்
இப்போது, விடுதியின் உள் பூகம்பமே வெடித்திருக்கும்.
புகை வெளியேற முடியாமல் விடுதிக்குள் புகுந்தது.
ஆ... தீ...! தீ...!
ஆபத்து! மில்டன்! இந்த வாளை உருவிக்கொள்!
விக்டர் பதட்டத்துடன் ஓடிவந்தான். டிஸ்கோ சுவரில் மாட்டியிருந்த வாளை உருவிக்கொண்டார்.

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner


விக்டர் கீழே விழுந்த அதேநேரம் அலெக்சு ஆவேசமாக விடுதிக்குள் பாய்ந்து வந்தான்.
டிஸ்கோ! இவனை என்னிடம் விட்டுவிடு!

அலெக்சு விக்டரை தூக்கிப் பார்த்தான்.
சே! எனக்கு வேலையில்லாமல் போய் விட்டதே!

மாடியிலிருந்து விழுந்த விக்டர், இறந்துபோனான்.
அவனுக்கு கழுத்து எலும்பு ஒடிந்து விட்டது!
இந்தா டிஸ்கோ! உன் துப்பாக்கி! முரடர்களிடம் சண்டை போட்டு இதை வாங்கி வந்திருக்கிறேன்!

விக்டர் ஒழிந்தான்! இனி கவலையில்லை! வா அன்பே! நாம் திருமணம் செய்து கொள்ளலாம்!
நிறுத்துங்கள்! அலெக்சு!
ரீட்டா கத்தினாள்.

Scanned by CamScanner

ராணி சின்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

Scanned by CamScanner

மாந்திரீகச் சக்கரம்

பி.டி.சாமி

13

முன்கதை சுருக்கம்:-

அம்மன் சக்தியைப் பற்றி கட்டுரை எழுதுவதற்காக, கேரளாவில் உள்ள குருதி அம்மன் கோவிலுக்குச் சென்றாள் அபிநயா. கோவில் பூசாரி- ஆனைக் கண்ணன் கொடுத்த விபூதியை வாயில் வாங்கிக்கொண்ட அபிநயா மயக்கத்துக்குப் போனாள். அவளைத் தேடி இந்திரகாந்தும், ஓமனாவும் புன்னம்புழாவுக்குச் சென்றார்கள். அங்கு கொச்சுக்குட்டி இவர்களுக்காக காத்திருந்தான்.

ஓமனா தன்னுடைய இயல்பான மனநிலைக்கு வர மிகவும் சிரமப்பட்டாள். முகம் சாயம் கலைந்த பட்டுச் சேலையின் நிறத்திற்கு வந்தது. பரிதாபமாக எதிரில் இரக்கமே இல்லாமல் நின்றுகொண்டிருந்த கொச்சுகுட்டியைப் பார்த்தாள்.

அவனுக்காக ஒரு கொலை செய்ய வேண்டுமாமே...!

கடுமையாக அதிர்ந்து ஒரு நிமிடம் வரையில் என்ன பேச வேண்டும் என்று அவளுக்குத் தெரியவில்லை.

"நீ...நீங்க என்ன சொல்றீங்க?" பேசியபோது நாக்கு மேலே ஒட்டிக்கொண்டு கீழே இறங்க முடியாமல் தர்ணா செய்தது.

எதிரில் நின்று இவள் உடலில் உள்ள மேடுபள்ளங்களை சந்தோசமாக ஆராய்ந்து கொண்டிருந்த கொச்சுக்குட்டி, புன்னகையுடன் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஓமனா... நீ இன்றைக்கு பெரிய இடத்துப் பெண். என்னைப் போல் சகலவிதங்களிலும் வசதிபடைத்த சுகுமாரன் தம்பியின் சட்டரீதியான மனைவி."

"ஆ...ஆமா... அ...அதுக்கு இப்போது என்ன?"

"சுகுமாரன்தம்பிக்கு மனைவி! அதே நேரத்தில் இளைஞன்- அதாவது அவரோட ஒரே மகன் இந்திரகாந்துக்கும் மனைவியாக இருக்க ஆசைப்படுறே... சரியா?"

கோயிலில் அம்மனுக்குப் பிடித்தமான மஞ்சள் ஆடையில் இருக்கும்போது பேச வேண்டிய வார்த்தைகளா இவை?

இவள் உடனே மறுக்க நினைத்து அதிகமாகச் சுரந்த உமிழ்நீரை விழுங்கிவிட்டு மிரளும் கண்களுடன் பார்த்தாள்.

Scanned by CamScanner

"காதில் கடுக்கனும், கையில் காப்பும் அணிந்துகொண்டு நாகரீகம் தெரியாமல் இருக்கும் சுகுமாரன்தம்பியை உனக்குப் பிடிக்கவில்லை. பெயரளவுக்கு நீ மனைவியாக இருந்துகொண்டே மகனுடன் பழக நினைக்கிறே..."

"இ...இல்லே."

"என்னடி பொய் சொல்றே? நீ அவனைப் பார்த்த குறுகுறு பார்வையும், மேலாக்குச் சரிந்து விழுந்ததைக் கவனிக்காமல் சிரித்தச் சிரிப்பும், சும்மா சொல்லக்கூடாதடி. நல்லாவே சிரிக்கிறே. எப்படியும் அவனை உன் மடியில் விழ வைச்சிடுவே அந்த சாகசம் உன்கிட்டே உண்டு."

இவள் மவுனித்தாள்.

"ஓமனா! நீ பருவ சாகசக்காரி. இந்திரகாந்த் எப்படியும் உனக்குக் கிடைப்பான். அவன் உன்னைப் பார்க்கிற பார்வையே சரியில்லை. எப்படியோ நீ சந்தோசமாக இரு. எனக்கு அதில் நட்டம் இல்லை. ஆனால், இந்த நேரத்தில் எனக்காக ஒரு முக்கியமான கொலையைச் செய்யாமல் இருந்தால் தான் நஷ்டம்."

"நா...நான் யாரைக் கொலை செய்யணும்?"

"உன்னோட எதிரியை!"

"யா...யார் என்னோட எதிரி?"

"என்னடி எதுவுமே தெரியாதது போல பசப்புறே? இந்த நிமிடத்தில உன்னோட இரகசிய காதலுக்கு எதிரி யார்? அதாவது, இந்திரகாந்தை நீ

விரும்புறே. சரியா?"

"இ...இல்லே."

"பொய்.

எனக்குத் தெரியும். தண்ணீரில் நடந்தால் கூட கால் தடம் எடுக்கக் கூடியவன் நான். என்னை ஏமாற்ற முடியாது. உள்ளூர அவன் மீது உனக்கு ஆசை உண்டா? இல்லையா?"

"உ...உண்டு."

"ஆனால், இதை நேரடியாகச் சொல்லி படுக்கைக்கு அழைக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, சரியா?"

"ஆ...ஆமா."

"மனசுக்குள்ளார கொழுந்து விட்டெரியும் ஆசை! அவன் கிடைக்கமாட்டானான்னு ஒவ்வொரு நிமிடமும் ஆசை. இதுவும் சரியா?"

"ச...சரிதான்."

"அவன் உனக்கு நிச்சயமாகக் கிடைப்பான். நானே உனக்கு உதவி செய்கிறேன். நீ குழந்தை வரம் கேட்டுத்தானே இங்கே வந்திருக்கிறே?"

"ஆ...ஆமா."

"அந்த வரம் இந்திரகாந்த் மூலமாகவே நிறைவேறும். ஆனால், மகனை உனக்கு விட்டுக் கொடுக்க அவனோட அப்பன் ஒருபோதுமே சம்மதிக்க மாட்டான். உனக்கு அவன் பயங்கரமான எதிரியாக மாறி விடுவான். உன் கணவன் சுகுமாரன்தம்பி உனக்கு— உன் கள்ளக் காதலுக்கு எதிரி... சரிதானே."

"உம்..."

"அவன் எனக்கும் எதிரி. ஜென்ம பகைவன். நம் இரண்டு பேர்களுக்குமே பொது எதிரியான உன் கணவன் சாகடிக்கப்பட வேண்டும். அதாவது கொலை செய்யப்பட வேண்டும். அந்தக் கொலையைச் செய்ய வேண்டியவள் நீதான்!"

அவன் சொன்னதும்—

மண்டபத்தின் மேல் தளம் வெடித்துச் சிதறியது போன்ற பலத்த அதிர்ச்சி இவள் இதயத்தைத் தாக்கியது.

குபீரென்று வியர்த்து, கால்கள் தரையின் பிடிப்பை இழந்துவிட்டது போல் தள்ளாடினாள். உடம்பு தளர்ந்துவிடவே தூணை இன்னும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

தன்னுடன் சேர்ந்து மண்டபம் பூராவும்... சுழன்று... மேலுக்கும் கீழுக்குமாகச் சுழன்று தத்தளித்தாள்.

ஓமனாவைப் பொறுத்தவரையில் இளம்பெண். ஆரோக்கியமான உடம்பைக் கொண்டவள். இவளுடைய அபாரமான ஆசைகளுக்கு தாம்பத்தியம் நிறைவானதாக இல்லை.

அதேநேரம்—

கணவனை இழந்துவிடத் தயாராக இல்லை.

அவர், மனைவி மீது உயிரையே வைத்திருந்தார் என்பது மட்டும் உண்மை. அளவுகடந்த பாசம். ஏகப்பட்ட அன்பு. எப்பொழுதும் ஓமனா... ஓமனா என்று புலம்பிக்கொண்டே இருப்பார்.

ஒருமுறை இலேசான காய்ச்சலில் படுக்கையில் படுத்திருந்தாள். நரம்புகளில் விண் விண் என்று தெறிக்கும் தலைவலி.

ஓமனாவின் நெற்றியைத் தேய்த்து விட்டுக்கொண்டிருந்த

Scanned by CamScanner

அவர் கண்ணீரை வழிய விட்டார். அழுதுகொண்டே சொன்னார்.

"பிரியப்பட்ட ஓமனாக் குட்டி! உன் மேல தூசு விழுந்தாலும் அதை என்னால தாங்கிக்க முடியாது. ஒருவேளை நீ செத்துப் போயிட்டால், அதன் பிறகு உன் மேல் விழுந்து அழறதுக்கு நான் உயிரோட இருக்க மாட்டேன்" என்று சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதார். நெஞ்சில் முகம் புதைத்து விம்மினார்.

இவள் அந்த நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டாள். அவரை இரு கைகளினாலும். சேர்த்து அணைத்துக்கொண்டு வாய்விட்டுக் கதறினாள்.

"நான் சாகமாட்டேன்... சாக மாட்டேன். உங்களையும் சாக விடமாட்டேன்."

அன்று நடந்த நிகழ்ச்சி இப்பொழுது நடைபெற்றது போல் இருக்கிறது.

இவள் அதை நினைத்துக் கொண்டதும் கலங்கிப் போயிருந்தக் கண்களிலிருந்து குபுக்கென்று கண்ணீர் வழிந்தோடியது.

இவளையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்த கொச்சுக் குட்டிக்கு இவள் ஏன் அழுகிறாள் என்பது புரியவில்லை.

"எந்தா இது... ஆரையுன்னு... ஏ பெண்குட்டி... கரையதே... நான் எத்தனையோ சினிமா நடிகைகளை என்னோட படுக்கையறைக்கு கொண்டுவந்து பார்த்தவனாக்கும். நானே ஒரு நடிகன். கிளிசரின் போடாமலேயே எப்படி கண்ணீர் வடிக்கணும் என்கிறது எனக்குத் தெரியும். அதனால படிதாண்டாத பத்தினி போல நடித்து... நீலிக்கண்ணீர் வடித்து என்னை ஏமாற்ற முடியாது."

அவன் சொல்லச் சொல்ல, இவள் நெஞ்சு 'திக் திக்' என்று அதிர்ந்தது. இதயத்தை யாரோ பிடித்துக்கொண்டு தொங்கி ஊசலாடுவது போல் இருந்தது.

அவள் சிரமமாய் மூச்சு விட்டாள்.

சுவாசம் பெரிதாகி புஸ் புஸ் என்று வெளியேறியது.

அவன் இரக்கமே இல்லாமல், ஆனால், யாரும் சந்தேகிக்க முடியாத புன்னகை முகத்தோடு பேசினான்—

"ஓமனா! உனக்கு இருபத்திநான்கு மணி நேரமே அவகாசம். அவனை நீ எப்படியும் கொல்ல வேண்டும். அவனோட சொந்த ஊர் எது?"

"பத்தன்கோடு."

"ஆமா. பத்தன்கோடுக்கு அவன் உயிரோடு திரும்பக் கூடாது. வல்லம் நாராயணியின் தலை ஜீப்புக்குள்தானே கிடந்தது?"

"ஆ...ஆமா."

"அதே ஜீப்பில் இனி சுகுமாரன்தம்பியோட— அதாவது உன் கிழட்டுக் கணவனோட உடலைத்தான் நீ எடுத்துக் கொண்டு போகணும். இதைச் செய்ய நீ மறுத்தால்... என் குணம் உனக்குத் தெரியும்."

சொல்லச் சொல்ல, அவன் முகம் விகாரத்திற்குப் போய்க் கொண்டே இருந்தது.

(தொடரும்)

Scanned by CamScanner

ராணியில்

புதிய
சிறுவர் தொடர்கதை

நெற்றிக்கண் மந்திரவாதி

மாயாஜாலம்
நிறைந்த கதை
இப்பொழுது வெளிவந்து
கொண்டிருக்கிறது!

ராணி வார இதழ்,
சென்னை-600007

Scanned by CamScanner

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த காமிக்ஸ்



தில்லான்

தோன்றும்

குழந்தைக்காக

முழுநீளப் படக்கதை

ஒரு நீதிபதியின் பேத்தி கடத்தப்படுகிறாள்!
குழந்தையை தில்லான் மீட்கிறான்!

பரபரப்பூட்டும் திகில் கதை!

நவம்பர் 16-ந்தேதி வெளிவருகிறது!
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Scanned by CamScanner